## இந்திய அரசியலமைப்பு - பகுதி - 21

### 21] ஆட்சிமொழி (Official Language)

### பாடக்குறிப்புகள்

**(பகுதி - XVII)**

**மத்திய ஆட்சி மொழி(சரத்து-343)**

மத்திய அரசின் அலுவலக / ஆட்சி மொழி தேவநாகரி எழுத்துருவிலுள்ள இந்தி ஆக இருத்தல் வேண்டும்.

அலுவலக பயன்பாட்டிற்கான எண்ணுரு "பன்னாட்டு வடிவ இந்திய எண்களில்" இருக்க வேண்டும்.

அரசியலமைப்பு தொடங்கிய 15 ஆண்டுகளுக்கு ஆங்கில மொழி அலுவல் முறை நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படலாம்.

**அலுவலக மொழிக்கான அணையம் மற்றும் குழு(சரத்து-344)**

அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்ததிலிருந்து 5 ஆண்டுகளுக்குள்ளாக பிறகு ஒவ்வொரு 10 ஆண்டுகளுக்கு ஒரு முறையும் குடியரசுத் தலைவர் மொழி ஆணையத்தை நியமிக்க வேண்டும்.

இந்த ஆணையத்தின் ஒரு தலைவர், எட்டாவது அட்டவணையில் உள்ள மொழிகளை பிரதிநிதிப்படுத்தும் உறுப்பினர்களை குடியாசுத் தலைவர் நியமிப்பார்.

**ஆணையத்தின் பணிகள்:**

பிவரும் பரிந்துரைகளை குடியரசுத் தலைவருக்கு கொடுக்கும்.

மத்திய அரசு அலுவல் மொழியாக ஹிந்தி பயன்படுத்துதல்.

ஆங்கிலத்தை பயன்படுத்த கட்டுப்பாடுகளை விதித்தல்

உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றங்களில் பயன்படுத்தப்படும் மொழிகள் தொடர்பாக குறிப்பிடுதல்

மத்தியில் எண்ணுரு பயன்படுத்துதல் தொடர்பாக

மத்திய அரசின் அலுவலக மொழி மற்றும் மாநில மத்திய அரசுகளுக்கிடையேயான தொடர்பு மொழி, மாநிலங்களுக்கிடையேயான தொடர்பு மொழி தொடர்பாக குடியரசுத் தலைவரால் பரிந்துரைக்கப்பட்ட விடயங்கள்.

**மொழிக்குழு:**

மொத்த உறுப்பினர்கள் 30 பேர். அவர்களில் 20 உறுப்பினர்கள் மக்களவையிலிருந்து மக்களவை உறுப்பினர்களாலும், 10 உறுப்பினர்கள் மாநிலங்களவையிலிருந்து மாநிலங்களவை உறுப்பினர்களாலும் ஒற்றை மாற்று விகிதாச்சார முறையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

**மாநில ஆட்சிமொழி(சரத்து-345)**

மாநில ஆட்சிமொழியாக அம்மாநிலத்தில் பயன்படுத்தப்படும் மொழிகளுள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அல்லது ஹிந்தியினை சட்டமன்ற சட்டத்தின் மூலம் ஏற்றுக் கொள்ளலாம்.

இரண்டு மாநிலங்கள் தங்கள் தொடர்புக்காக ஹிந்தி மொழியை ஏற்று உடன்பாடு கொள்கின்றன என்றால் அம்மொழியினை பயன்படுத்தலாம்.(சரத்து-346)

**உச்சநீதிமன்ற, உயர் நீதிமன்ற மொழிகள் (சரத்து-348)**

உச்சநீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றத்தின் அனைத்து நடவடிக்கைகளும், நாடாளுமன்றத்தில் அல்லது சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படும் அனைத்து

மசோதாக்களும், சட்டங்களும், அனைத்து உத்தரவுகளும் ஆங்கில மொழியில் இருத்தல் வேண்டும்.

மாநிலத்தின் மாநில மொழியினைப் பயன்படுத்த ஆளுநர் அதிகாரமளிக்கலாம்.

**சரத்து-350 B**

சிறுபான்மை ஒழியினருக்காக தனி அலுவலர் (Special Officer for linguistic minorities) ஒருவரை குடியரசுத் தலைவர் நியமித்தல் வேண்டும்.(1956 ம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட 7 வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தினால் புதிதாக சேர்க்கப்பட்டது)